## ஜெல்லி மீன்

வெளிச்சம் பூத்த தண்ணீர் உடம்புடன்
ஒரு பிளாஸ்டிக் பை போல
கடலோரத்தில் ஒருஜெல்லி மீன்.
கடலில் பூத்த நீல ரோஜாவே வருக.
நீ எனது இன்றைய விருந்தாளி.
உனது முன்னிலையில்
எனது உயிரில்
பலகோடி ஆண்டுகள் வாழ்ந்த உனது முன்னோர்களின்
பரிசுத்த வெளிச்சங்கள்.
இளமையிலிருந்து முதுமைக்கும்
முதுமையிலிருந்து இளமைக்கும்
மாறி மாறி மரணத்துடன் கண்ணாமூச்சி விளையாடும்
ரகசியத்தை உனக்குக் கற்றுக் கொடுத்தது யார்?
மரணத்தின் மர்மத்தை அறியும் சாவி
உன்னிடமிருந்தால் எனக்கு அதைத் தருவாயா?
மூளையோ ரத்தமோ இதயமோ இல்லாமலேயே
உணர்கொம்புகளால் நீச்சல் நடனமாடி
ஆழ்கடலில் ஒரு மகத்தான நட்சத்திரப் பால் வீதியை
நீங்கள் உருவாக்குகிறீர்கள்
காலமும் வெளியும் காரணமின்றி பிறந்து தொலைத்த
இந்த பிரபஞ்சத்தில்
எந்த அபத்தத்தை நிரூபிப்பதற்காக
நாம் இங்கே வந்து சேர்ந்தோம்?
ஆணிலிருந்து பெண்ணாகவும்
பெண்ணிலிருந்து ஆணாகவும் ஆழ்கடலில் மாறி

ஒரு செப்பிடுவித்தைக்காரன் போல் பிறப்பின் மாயம் காட்டும் நீ
எங்களின் பாலரசியல் பற்றி என்ன சொல்லப் போகிறாய்?
புதுவைக் கடலோர பாறையில் அமர்ந்து
கொஞ்சம் பேசுவதற்குள் பேரலை ஒன்று சீறிப் பாய்ந்து
ஜெல்லி மீனைக் கவர்ந்து சென்றது.

--- 23 ஆகஸ்டு 2020

---